## தலைப்பு 287 – காணி நிர்ணயத் திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி நிர்ணயத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பா் 31 இல் உள்ளவாறான அரசாங்க காணி நிர்ணயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதெனை முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றில் ஆண்டிற்கான மூலதன சொத்துக்களின் சுவீகரிப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,215,000 தொகை திறைசேரி அச்சீட்டு பதிவில் ஆண்டிற்கான கொள்வனவுகளின் கீழ் ரூபா 37,615,000 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 36,400,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலெக்க அரச கணக்குகளின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அதில் உள்ளடக்க வேண்டிய எண்ணிக்கை சார்ந்த பெறுமதிகள் திறைசேரியின் இறுதி நிதிக்கூற்றில் பெறுமதிகளுடன் ஒத்திருக்க வேண்டும். | 2016 ஆம் ஆண்டு முதல் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட இந்த கட்டிடத்திற்கு வருடாந்தம் செலுத்தப்பட்ட நிர்மாணங்களின் பெறுமதி பூர்த்தி செய்யப்படாத பணிகளாக காண்பித்து 2019 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பின்னர் அது பூர்த்தி செய்யப்பட்ட பணியாக CIGAS கட்டமைப்பிற்கு உள்ளடக்கப்பட்டமையால் அது ஆண்டிற்கான சுவீகரிப்பாக காண்பிக்கப்படுகின்றது. |

## 1.6.2 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் | | |
| நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் திணைக்களத்திற்கு சொந்தமான 41 வாகனங்களில் 21 வாகனங்களுக்கு உரிய சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சம்பவக் குறிப்பு புத்தகம் நாளதுவரையாக்கப்பட வேண்டியமை. | 21 வாகனங்களுக்கு உரிய சம்பவக் குறிப்பு புத்தகங்களை நாளதுவரையாக்குவதற்கு கூடிய விரைவில் நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கின்றேன். |

## 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தி | பிரஜைகள் / சேவை பெறுநர் கட்டளையின் கீழ் உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தும் பணிகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக திணைக்களத்தினால் நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அது இடம் பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | செயலாற்றல் அறிக்கையில் சாத்தியவள அறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | அனைத்து எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத கால எல்லையில் அல்லது 25,000 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட பின்னர் அல்லது என்ஜின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியமை. | திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களுக்குமாக எரிபொருள் பரிசோதனையை இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் நடாத்துவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பில் பிரதான பழுதுபார்த்தலின் பின்னர் ஆகிய விடயங்களில் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீள எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 21 வாகனங்கள் அவ்வாறு எரிபொருள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். |
| (இ) | 2019 யூலை 30 ஆந் திகதிய 1/2019 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் iv ஆம் பந்தி | அனைத்து கள உத்தியோகத்தர்களும் ஒவ்வொரு மாதத்திற்கான தமது நிகழ்ச்சித்திட்டத்தினை அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தின் 25 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்து அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பிரதேச அலுவலகமொன்றின் 12 உத்தியோகத்தர் களினால் 36 மாதங்களுக்காக முன்னோக்கிய நிகழ்ச்சித் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காகவும் முன்னோக்கிய நிகழ்ச்சித் திட்டம் அந்தைய மாதத்திற்கு முந்தைய மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியமை. | முன்னோக்கிய நிகழ்ச்சித் திட்டங்களை உரிய திகதிகளில் சமர்ப்பிக்குமாறு அனைத்து கள உத்தியோகத்தர் களுக்கும் அபராதம் செய்யப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரு மீண்டெழும் செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 90,901 மற்றும் ரூபா 10,262 படி 12 சதவீதம் மற்றும் 15 சதவீதம் படியாக சேமிப்புக்கள் காணப்பட்டன. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | பதிற் கடமை பணிகளுக்கு போக்குவரத்து செலவினங்களை செலுத்துதல் நிறுத்தப்பட்ட காரணத்தாலும் ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தின் நீர் மற்றும் மின்சார பட்டியல்களுக்கு நிர்மாண ஒப்பந்ததாரர் கூடுதலாக பணம் செலுத்திய காரணத்தாலும் பணம் எஞ்சியிருந்தது. |
| (ஆ) | மூலதன செலவினங்களில் 15 சதவீதம் மற்றும் 10 சதவீதம் படி சேமிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், திணைக்களத்தின் ஒட்டுமொத்த மூலதன செலவின நிதியேற்பாடான ரூபா 5,500,000 இல் ரூபா 1,104,355 தொகை எஞ்சியிருந்ததுடன் அது 20 சதவீதம் ஆகும். | 2019 செம்தெம்பர் 24 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | ஆண்டின் ஆரம்பத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிராமையால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது. |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்களை வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஓய்வுபெற்ற, பணிநீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து | உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை கடன் மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 318,415 தொகையினை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து |

| | | |
|---|---|---|
| அறவீடுகள் நிறுத்தப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 499,305 ஆக காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அறவிடுவதற்கும், பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 176,390 ஆன கடன் மீதியில் ரூபா 93,730 ஒழுக்காற்று நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கும், ரூபா 82,660 சேவையில் மீள நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து எதிர்காலத்தில் அறவிடுவதற்கும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரின் கடன் மீதியை பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2004 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை 1/2014 ஆம் இலக்கத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்திற்கு மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியமை. | செயலாற்றல் அறிக்கையில் சாத்தியவள அறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக அனைத்து துறையினதும் ஊழியர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பயிற்சி திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வாளர் பதவி 2019 ஆம் ஆண்டினுள் வெற்றிடமாக காணப்பட்டமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான 05 வருட காலத்தினுள் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்காக இலக்குகளை நிறுவுதல் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தினால் இலக்குகளை நிறுவும் போது கடந்த வருடத்தின் செயன்முன்னேற்றம், கிடைத்துள்ள நிதியேற்பாடு, பதவியணி, நிறுவனத்தின் இயலுமை மற்றும் அளவையலாளர் திணைக்களத்தின் எல்லை வரைபடங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள இலக்குகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | கடந்த வருடங்களில் கையிருப்பில் காணப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கை, இலக்கிடப்பட்ட ஆண்டிற்காக அளவையாலளர் திணைக்களத்தினால் வழங்குவதற்கு இலக்கிடப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கை, பதவியணி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் வருடம் முதல் இலக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

**3.2 எதிர்பார்த்த அடைவு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச அலுவலக மட்டத்தில் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது 28 பிரதேச அலுவலகங்களின் 14 பிரிவுகளின் கீழ் வர்த்தமானியில் அறிவிப்பதற்கு அனுப்பப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கையிலான முன்னேற்றம் 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் 15 சதவீதத்திலிருந்து 81 சதவீதம் வரையான வீச்சில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. | பிரதேச அலுவலக மட்டத்தில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தை துரிதப்படுத்துவதற்கான கிரமமான வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டியமை. | 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டினுள் வரைபடங்கள் கிடைப்பதில் குறைவொன்று காணப்படுவதுடன் அளவை கோரப்பட்ட அளவில் அளக்கப்பட்ட துண்டுகள் கிடைத்திராத காரணத்தால் கடந்த வருடத்தில் எஞ்சிய துண்டுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரித்துக்களை தீர்ப்பனவு செய்யும் போது பிற்போடப்பட்ட 485,351 கோவைகளில் 46,656 கோவைகளுக்கு அல்லது 10 சதவீதமானவற்றுக்கு மாத்திரம் தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு பிற்போடப்பட்ட கோவைகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் குறித்த விசேட வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படாத காரணத்தினால் தீர்ப்பனவு செய்யும் பணிகளை நிறைவேற்றுதல் தாமதமடைந்திருந்தது. | பிற்போடப்பட்ட கோவைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பின்தள்ளப்பட்டுள்ள கோவைகளுக்கு மீள தீர்மானத்தினை வழங்குவதற்கு உள்ள இயலுமையை பரிசோதித்து அதன் செயல் முன்னேற்றத்தை மாதாந்தம் தலைமை அலுவலகத்திற்கு அறிக்கையிடும் வகையில் 2020 யூன் 30 ஆந் திகதிய 04/06/16-01 ஆம் கடிதத்தின் மூலம் அனைத்து பிராந்திய அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டது. |
| (இ) | மீளாய்வாண்டின் போது காணிகளினை நிர்ணயிக்கும் கட்டளைச் சட்டத்தின் கீழான 08 பிரதான பணிகள் அளந்து ஒதுக்கீடு செய்தல்களை பரிசோதித்தல், ரேகை சித்திர கோரிக்கை, தீர்ப்பனவு பிரமாணத்தினை காணிகள் பதிவாளருக்கு அனுப்புதல், தீர்ப்பனவு பிரமாணத்தினை அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்புதல் மற்றும் தீர்ப்பனவு கட்டளைகளை வர்த்தமானியில் வெளியிடுதல் ஆகிய 05 பணிகளின் இலக்கிற்கு ஒப்பான செயல் முன்னேற்றம் 50 சதவீதத்தினை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | திட்டமிடப்பட்டவாறு இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | காணிகள் நிர்ணயிக்கும் அடிப்படை படிமுறைகள் 22 பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதன் ஒரு படிமுறைக்கு செல்வதில் ஏற்படும் தாமதங்கள் அல்லது நிறைவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் தீர்ப்பனவு செய்தல் முன்னோக்கி செல்வதற்கு அசௌகரியமாக அமையும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பிம்சவிய நிகழ்ச்சித் திட்டம் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்வதற்கு அடிப்படை திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 17 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் 58 பிரதேச செயலக பிரிவுகளுக்கு உரிய மொத்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 3,621 இன் அளவைப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தது 1,359 பிரிவுகளில் அல்லது 38 சதவீதமானவற்றில் மாத்திரம் ஆகும். | திட்டமிட்டவாறு இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றினை நிறைவு செய்வதற்காக வலய வரைபடங்கள் அனைத்தும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். எனினும், பிரதேச செயலக பிரிவுகளுக்காக இணைப்புச் செய்யப்பட்ட அளவையியலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை அளந்து நிறைவு செய்யப்படவில்லை. மேலும், திணைக்களத்தினால் முன் வைக்கப்பட்ட அளவீட்டு கோரிக்கைகளுக்கான பணிகள் இந்த வருடத்திலேயே இடம்பெறுகின்றன என்பதனால் அளவீட்டுப் பணிகளை பூர்த்தி செய்தல் தாமதமடைந்துள்ளது. |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருட காலமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது திணைக்களத்தின் வளாகத்தில் விளைவற்று தரித்த வைக்கப்பட்டிருந்த டபள் கப் வண்டி 2019 மே மாதத்தில் ரூபா 2,000,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கைத்தவிர்ப்பதற்கு | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மற்றும் 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ | சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்பதற்காக காணிகள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் உள்ள வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | |
| (ஆ) | பிரதேச அலுவலகத்தின் கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் 26 பயன்படுத்தப்படாது சுமார் 03 முதல் 07 வரையான காலவீச்சில் விளைவற்று காணப்பட்டதுடன் கணனிகள் பிரிவில் பொருத்தப்பட்டிருந்த 05 கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் 3 வருட காலமாக அலுவலகப் பணிகளில் பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்பட்டது | இந்த அலுவலக உபகரணங்கள் நிறுவனத்தின் பணிகளுக்காக ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு அல்லது தேவையுள்ள ஏனைய பிரதேச அலுவலகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | காணிகள் பதிவாளர் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட உரித்துறுதிகளை பதிவு செய்வதற்கு உரிய நெறிமுறைப்படுத்தப்பட்ட கணனி கட்டமைப்பு முழுமையாக நிறுவப்பட்டிராத காரணத்தால் அலுவலகத்திற்கு வழங்கிய கணனிகளை பயன்படுத்த முடியாதிருந்தது. இந்த கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்களை எதிர்காலத்தில் தேவை நிலவும் ஏனைய அலுவலகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 36,400,000 ஆன பெறுமதியில் காண்பிக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லம் 2018 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், காணியின் உரித்தினை சுவீகரித்திருக்கவில்லை. | காணியின் உரித்தை சுவீகரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | மேல் மாகாண சபை ஆளுனருக்கு கடுவலை பிரதேச செயலாளர் ஊடாக காணியின் உரித்தினை பெற்றுக் கொள்வதற்கு உரிய ஆவணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. |

## 3.4 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு சொந்தமான டபள் கெப் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பில் ஏற்பட்ட பழுதுபார்த்தல் செலவினமான ரூபா 22,250 நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 08 வருடங்கள் பழமையான இந்த மீதியை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இந்த வாகனத்திற்கு ஏற்பட்ட அறவிட முடியாத நட்டம் தொடர்பில் 2020 ஆம் ஆண்டினுள் திணைக்களத் தலைவரின் அங்கீகாரத்துடன் பதவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்கு உரிய பொருள் மெய்மையாய்வின் தலைமை அலுவலகத்தின் 2 பிரிவுகளின் மற்றும் நான்கு பிரதேச அலுவலகங்களை உள்ளடக்கியவாறு 22 கணனி மற்றும் உதிரிப்பாகங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 24 மற்றும் மின்சார உபகரணங்கள் 07 ஆக 53 பொருட்களின் பற்றாக்குறை தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வில் வெளிப்படுத்தப்படும் பற்றாக்குறைகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் தகவல்களை முன்வைக்கின்றேன். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் துரிதமாக பிராந்திய அலுவலகங்களை திறக்கும் நோக்கில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு 17 உத்தியோகத்தர்கள் 2013 ஆம் ஆண்டின் போது இணைத்துக் கொள்ளப்பட்டு வடக்கு மற்றும் கிழக்கு பிரதேச செயலகங்களில் தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பிரதேச செயலகங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் உத்தியோகத்தர்களின் நிர்வாக நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும், குறித்த உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்படும் கடமைகள் திணைக்களத்தின் கடமைகளுடன் பொருந்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் தேவை தொடர்பில் கருதி இதுவரையிலும் தாபிக்கப்பட்டுள்ள பிரதேச அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்வதற்கு அல்லது வடக்கு மற்றும் கிழக்கு பிரதேச அலுவலகங்களை துரிதமாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | வெற்றிடங்கள் நிலவும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு இந்த உத்தியோகத்தர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 2,238 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி 826 அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 63 சதவீதம் ஆகவும் 1,412 வெற்றிடமாகவும் | 43 பிரதேச அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டவாறு பதவியணியினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பிரதேச அலுவலகங்களின் எண்ணிக்கையை அதிகரித்து அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

காணப்பட்டது. 90 பிரதேச அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்காக பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது வரையிலும் 43 பிரதேச அலுவலகங்கள் மாத்திரம் நடாத்திச் செல்வதற்கு உரிய வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்தாத காரணத்தால் இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் நிலவுவதற்கு காரணமாக அமைந்திருந்தது.